भारतीय गैर न्यायिक

एक सौ रुपये

Rs. 100

रु. 100

ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU

26 MAR 2026

M. Nazrudeen & others.

ES 626800

R. LALITHA
STAMP VENDOR
Lic. No. 16/2021/2018
No. 1 Rangoji Chetty Street,
Chennai - 600 001.

மனுதாரர்:

1) M.நசிருதீன் (Managing Partner - AL. DEEVAN DREAMLAND PROMOTERS)

2) S.சைபுல் ஹக், 3) N.ஜாஸ்மின் பானு

4) S.அப்துல் காதர், 5) N.நர்கிஸ் (Power Agent)

பெறுநர்:

தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம் எண்.133, G-பிளாக், முதல் நிழற்சாலை, அண்ணாநகர் (கிழக்கு), சென்னை – 600102.

பொருள்: பதிவு ஆவணம் மற்றும் பட்டாவில் உள்ள சதுர மீட்டர் வித்தியாசம் தொடர்பான விளக்கம்.

For AL-DEEVAN DREAM LAND PROMOTERS

Managing Partner

மதிப்பிற்குரிய!

அதிகாரி அவர்களுக்கு வணக்கம். நாங்கள் **08/03/2026** அன்று தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தில் விண்ணப்பம் எண்: **TNRERA/PLF/1773/2026** மூலம் **சுமார் 1 ஏக்கர் 91 சென்ட்கள்** அளவுள்ள நிலத்தை "தளவமைப்பு" (Layout) செய்து TNRERA வின் ஒப்புதல் பெற பதிவு செய்து இருந்தோம். TNRERA வில் ஒப்புதல் பெற பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் நிலத்தின் பதிவு ஆவணங்கள் **(ஆவண எண்: 5125/2024 ல் 4046.86 ச.மீ மற்றும் ஆவண எண்: 175/2026 ல் 3682.64 ச.மீ ஆக மொத்தம் 7729.50 ச.மீ)** மற்றும் பட்டாவில் **(7750.00 ச.மீ)** உள்ள சதுர மீட்டர் இடையே **(20.50 ச.மீ)** வித்தியாசம் இருந்தாலும் **DTCP** ன் ஒப்புதல் பட்டாவை பின்பற்றியே பெறப்பட்டது.

ஆனால் பட்டாவின் அடிப்படையில் "தளவமைப்பு" (Layout) ஒப்புதல் பெறப்பட்டிருந்தாலும் மனைகளை விற்பனை செய்யும் போது விற்பனை என்பது ஆவணத்தில் உள்ள சொத்து அளவின் அடிப்படையில் மட்டுமே விற்பனை செய்யப்படும் என்றும், இதனால் மனை வாங்கும் நபர்களுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் அதை நாங்களே முழுப்பொறுப்பேற்று அதை சரிசெய்து தருகிறோம் என்னும் இதன் மூலம் உறுதி அளிக்கிறோம். எனவே மேற்கண்ட விளக்கத்தை ஏற்றுக் கொண்டு **TNRERA** வில் ஒப்புதல் பெற பதிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பம் எண்: **TNRERA/PLF/1773/2026** க்கு ஒப்புதல் அளிக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு

தேதி : 02/04/2026

For AL-DEEVAN DREAM LAND PROMOTERS

Managing Partner